மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதற்கான முழுப் புள்ளி விவரம் இல்லை. என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், 12,000 'ரூரல் ரேடியோ ஃபாரம்ஸ்' நல்லமுறையில் செயல்பட்டு வருவதாக அறிகிறேன்.

நகராட்சிகள்

* 254 வின.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை நகரசபைத் தலைவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டாரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

* 255 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகராட்சி நிர்வாகத்தின் மீது புகார் மனுக்கள் ஏதேனும் அண்மையில் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Corporation Council Elections

* 256 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether walls of a Corporation High School were demolished in connection with the location of voting booths for Madras Corporation Council elections in 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம். ஏழு உயர்நிலை பள்ளிகளில்.

திருச்சிராப்பள்ளியில் புதைச் சாக்கடைத் திட்டம்

* 257 வின.—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—